# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office **பின்புறம்**),

**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590


**<u>ஆணை நாள் 07.07.2025</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**

**மாநில தகவல் ஆணையர்**

*****

## <u>வழக்கு எண்கள். CP 2910/விசாரணை/E/2022</u>

திரு தெ,சக்திவேல் .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ .. பொது அதிகார அமைப்பு
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
திண்டுக்கல் மேற்கு வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்

******

## <u>ஆணை</u>

1) இவ்வாணையத்தின் 24.01.2025 நாளிட்ட உத்தரவில், தகவல் பெறும் உரிமை சட்டம் குறித்துரைத்தபடி உரிய காலத்தில் மனுதாரருக்கு தகவல் தராத பொதுத் தகவல் அலுவலர் யார் என்பது குறித்து திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென கூறப்பட்டிருந்தது.

2) அதனை தொடர்ந்து, திண்டுக்கல் மேற்கு வட்ட சார் ஆய்வாளர் ஜெ.சந்தோஷ் 11.06.2025 அன்று ஆணையத்தில் ஆஜராகி திண்டுக்கல் மாவட்ட வருவாய் கோட்டாட்சியரின் அறிக்கையை ஆணையத்தில் தாக்கல் செய்தார்.

3) அவ்வறிக்கையில், ஆணையத்தின் உத்தரவு தொடர்பாக திண்டுக்கல் மேற்கு வட்ட தலைமையிடத்து துணை வட்டாட்சியர் 07.06.2025 தேதியிட்டு அறித்துள்ள அறிக்கையில், மனுதாரர் திரு சக்திவேல் சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 30.05.2022 அன்று மனு செய்தபோது, திண்டுக்கல் மேற்கு வட்ட தலைமையிடத்து துணை வட்டாட்சியர் பதவிக்கு திரு சுல்தான் சிக்கந்தர் என்பவர் முழுகூடுதல் பொறுப்பில் இருந்துள்ளார் என்றும், அப்பதவியில் இருந்த திரு ரமேஷ் என்பவர் 64 நாட்கள் நீதித்துறை பயிற்சிக்கு சென்றிருந்தார் என்றும் தெரிவித்துள்ளார்.

4) திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் தனது அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில், மனுதாரருக்கு 12.10.2023 மற்றும் 28.09.2024 ஆகிய தேதிகளில் திண்டுக்கல் மேற்கு வட்ட தலைமையிடத்து துணை வட்டாட்சியர் தகவல் வழங்கியுள்ளார் என்றும், திரு சுல்தான் சிக்கந்தர் என்பவர் முழுகூடுதல் பொறுப்பு வகித்தாலும், நடுவில் சிறிது காலம் திரு ரமேஷ் என்பவர் அப்பொறுப்பில் இருந்துள்ளதாகவும், அதனால் மனுதாரரின் மனுவை உரிய முறையில் கவனித்து பதில் அளிக்க முடியவில்லை என்றும், இனி வரும் காலங்களில் இதுபோன்ற தவறுகள் ஏற்படா வண்ணம் எச்சரித்து இந்த ஒரு முறை மன்னித்து விடலாம் என்றும் பரிந்துரைத்துள்ளார்.

5) வழங்கப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலித்த இவ்வாணையம், **முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்** திரு சுல்தான் சிக்கந்தர் என்பவரது **விளக்கத்தை ஏற்று, ஒழுங்கு நடவடிக்கையிலிருந்து அவரை விடுவிக்குமாறு** திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் **செய்துள்ள பரிந்துரையை இவ்வவாணையம் ஏற்கிறது. எனினும், எதிர்காலத்தில், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் வரும் மனுக்களுக்கு உரிய காலத்திற்குள் பதிலளிக்க வேண்டுமென எச்சரிக்கும் நமுனாவை முன்னாள் பொதுத் தகவல் அலுவலருக்கு வழங்க வேண்டுமென** திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியருக்கு **இவ்வாணையம் உத்தரவிட்டு, இந்த புகார் மனுவை முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.**

**ஒம்/- (பி.தாமரைக் கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 2910/விசாரணை/E/2022</u>**

**<u>பெறுநர்</u>**
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
திண்டுக்கல் மேற்கு வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்

வருவாய் கோட்டாட்சியர்,
திண்டுக்கல் வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்

திரு தெ.சக்திவேல் த/பெ தெண்டபாணி தேவர்,
வேலுமணி காம்பவுண்டு,
சுப்புராயர் தெரு, 4வது வீதி,
காந்தி நகர் அஞ்சல், திருப்பூர் - 641 603

Copy to: File
CR/PA